## <u>ஆத்தும சாந்தி - விண்ணப்பம்</u>

அன்பு சகோதர சகோதரிகளுக்கு, எனது வணக்கத்தை தாழ்மையுடனும் அன்புடனும் தெரிவிக்கிறேன்.

எனது அன்பு தாயாரின் ஆத்தும சாந்திக்காக கடவுளிடம் மன்றாடுவதற்கு முன், ஒரு கணம் நம்மைப் படைத்த கடவுளின் ஆலோசனைகளை நமது சிந்தனைக்கு கொண்டுவருவோம்.

**"அருளில்லார்க்கு <u>அவ்வுலகம்</u> இல்லை பொருள் இல்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு." (திருக்குறள் 247)**

*- இறைவனிடத்திலிருந்து சிறப்பான ஞானம் பெற்று வாழ்ந்த வள்ளுவரின் வார்த்தை.*

**"மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை (<u>ஆத்மாவை</u>) நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" (வேதாகமம்: மத்தேயு 16:26)** *- இறைவனுடைய வார்த்தை.*

இந்த வசனங்களிலுள்ள **<u>"அவ்வுலகம்"</u>, <u>"ஆத்மா"</u>** என்ற வார்த்தைகளை ஒருகணம் சிந்திப்போம்.
நம்முடைய இவ்வுலக வாழ்க்கை கடவுளுக்குப் பிரியமாயிருந்து, இந்த வாழ்க்கை முடியும்போது, என்றென்றும் அழியாத நம் ஆத்மா கடவுளோடு அவ்வுலக வாழ்க்கையில் ஐக்கியப்பட தகுதியாகிறது.
இதற்காக, நாம் ஒவ்வொருவரும், கடவுளின் அருளைப்பெற்று, பாவத்தைப்போக்கி, புண்ணியத்தைப் பெற்றுக்கொள்ள எண்ணிமுடியாத காரியங்களை பாரம்பரியமாகவோ, சடங்காசாரமாகவோ, மரியாதைக்குரிய காரியமாகவோ, கடமைக்காகவோ, பயத்துக்காகவோ.....இன்னும் பல காரணத்தினாலோ செய்துவருகிறோம். தமக்குத் தெரிந்த அளவிலே ஏதாவது ஒன்றைச் செய்து, தனக்குத்தானே திருப்தியுமடைகிறோம்.!

<u>நமது அறிவுக்கு எட்டாத</u> எல்லாம் வல்ல ஆண்டவரை, நம் அறிவைக்கொண்டு கடவுள் உதவியுடன், <u>படிப்படியாக மேலும் மேலும் அறிந்து</u> அவர் கொடுத்த கட்டளைகளுக்கு நம்மை தயார் படுத்துவதுதான் <u>பூரணத்தை நோக்கிச்செல்லும்</u> பக்தி அல்லது ஆத்மீக வாழ்க்கை. இதிலே நம்மை நாமே திருப்திபடுத்திக்கொள்வது சரியா? சிந்தித்துப்பாருங்கள்.....

*ஆண்டவருடைய ஜீவனுள்ள இந்த வார்த்தைகளை அமைதியாக வாசித்து ஒருகணம் சிந்தியுங்கள்:*
தேவன் ஐசுவரியத்தையும் சம்பத்தையும் எவனுக்குக் கொடுத்திருக்கிறாரோ, அவன் அதிலே புசிக்கவும், தன் பங்கைப் பெறவும், தன் பிரயாசத்திலே மகிழ்ச்சியாயிருக்கவும் அவனுக்கு அதிகாரம் அளிப்பது <u>தேவனுடைய அநுக்கிரகம்</u>. அவனுடைய இருதயத்திலே மகிழும்படி தேவன் அவனுக்கு அநுக்கிரகம் பண்ணுகிறபடியினால், அவன் தன் ஜீவனுள்ள நாட்களை <u>அதிகமாய்</u> நினையான்.(வேதாகமம்: பிரசங்கி 5:19-20)
இவ்வுலக வாழ்க்கை எவ்வளவு நாட்கள் என்று நமக்குத் தெரியாவிட்டாலும், ஆண்டவர் அநுக்கிரகத்தினாலே நமக்குக் கிடைத்துள்ள இந்த நாட்களின் உலகசூழ்நிலைகளினாலே, ஜீவனுள்ள நாட்களைக் கொடுத்த கடவுளை <u>அதிகமாய்</u> அறிந்து கொள்ள முடியாத அளவிற்கு நேரமில்லாமல் தவிக்கிறோம்.

**<u>கற்றதனா லாய பயனென்</u>கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின். <u>(திருக்குறள் 2)</u>**

தூய அறிவு வடிவமான இறைவனின் நன்மை தரும் திருவடிகளைத் தொழாதவர் என்றால், அவர் கற்றதனால் உண்டான பயன் யாதுமில்லை. *என்ற வள்ளுவரின் வாக்கின்படி,* திருவடிகளைத் தொழுவது என்பதை, சும்மா கடவுளை தொழுவது என்று எடுத்துக்கொள்ளாமல், <u>கடவுளை அறிந்து கொள்ளவும்</u> அவர் வார்த்தையின்படி வாழ முயற்சிசெய்வதுமே நமது இவ்வுலக வாழ்க்கையின் நோக்கமாக இருக்கவேண்டும் என சிந்திப்போம்.

சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும், அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று. (வேதாகமம்: கொலோசெயர் 1:19-20)
*என்ற ஆண்டவரின் வாக்கின்படி,*

**பக்தி வாழ்க்கையில், கடவுளையும் அவருடைய ஜீவனுள்ள கட்டளைகளையும் மேலும் மேலும் அறிந்து கடவுளோடு நெருங்கி வாழக்கூடிய இவ்வுலக வாழ்க்கையையும், இந்த வாழ்க்கைக்குப் பிறகுள்ள அவ்வுலக வாழ்க்கையையும் <u>நம் அனைவருக்கும்</u> ஆண்டவர் அருளவும்,
இறந்த எனது தாயாரின் ஆத்மா சாந்தியடைந்து கடவுளோடு அவ்வுலகத்தில் நித்தியஜீவனை பெறவும், எல்லாம் வல்ல ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவிடம் மன்றாடுகிறேன். ஆமென்.
கடவுள் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.**

"அருளில்லார்க்கு <u>அவ்வுலகம்</u> இல்லை பொருள் இல்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு." (திருக்குறள் 247)

அன்புடனும் ஜெபத்துடனும்,
மு.கல்யாணம்.
ஜூன் 5, 2012
✞